அசல் வழக்கு :28/2017

நாள் : 27.11.2025

பி.வா.சா. : 1

பெயர் : மாலதி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நன்றாக எழுதப்படிக்க தெரியும். வாதியை என் சொந்தக்காரர் தமிழ்வாணன் என்பவர் மூலமாக தெரியும். தாவா சொத்து உளுத்துக்குப்பை கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து ஆரம்பத்தில் என் மாமனார் பெயரில் இருந்தது. தாவா சொத்தை பொறுத்து 23.09.2004 அன்று என் மகன் மைனர் அபினாஷ் பெயரில் என்னை கார்டியனாக வைத்து ஒரு தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்து கடன், அடமானம், விற்கிரயம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது என்றால் அது சரிதான். அந்த சொத்தை பொறுத்து நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் GWOP 12/2016 என்ற வழக்கு நான் தாக்கல் செய்தேன் என்றால் அது சரியல்ல. எனக்கு அந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்னை அழைத்து சென்று ராமச்சந்திரன், காந்தி ஆகியோர் கையெழுத்து வாங்கினார்கள். அந்த வழக்கில் தாவா சொத்தை விற்பதற்கும் அபினாஷ்கு கார்டியனாக நியமிக்கவும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கில் தாவா சொத்து சம்பந்தப்பட்ட விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது எல்லாம் அவரால் கொடுக்கப்பட்டது. அந்த வழக்கு ஆவணங்கள் அனைத்திலும் நான் கையெழுத்து போடவில்லை அபிடவிட்டில் மட்டும் தான் கையெழுத்து போட்டேன். அந்த வழக்கில் தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் எம்பதாயிரம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. அந்த வழக்கில் தாவா சொத்தை விற்று அபினாஷ் படிப்பு, மருத்துவம், உணவு செலவிற்காகவும்

S. Malathi

பயன்படுத்திக்கொள்ள கேட்டிருந்தோம் என்றால் அது சரியல்ல. அந்த வழக்கில் மற்ற இரண்டு குழந்தைகளுக்காவும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதில் என்னையும் சேர்ந்து மேலும் இரண்டு பேரை சாட்சியாக விசாரித்தார்கள் என்றால் தெரியாது. அந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் 1 முதல் 8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அதில் என்னை காப்பாளராக நியமித்தும், சொத்தை விற்பனை செய்வதற்கும் நீதிமன்றம் உத்தரவி பிறப்பித்தது என்ற விவரம் வாதி காந்தி சொல்லிதான் எனக்கு தெரியும். அந்த உத்தரவில் தாவா சொத்தை விற்கு மைனர் நலனுக்குதான் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த உத்தரவு அடிப்படையில் வாதிக்கு 16.11.2016 அன்று தாவா சொத்து சம்பந்தமாக ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தேன் என்றால் 15.04.2016 அன்று நான் வாதியிடம் இரண்டு லட்சம் பணம் வட்டிக்கு வாங்கினேன். அதன்பிறகு அவர் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். நான்கு மாதம் கழிந்து வந்து பத்து பைசா வட்டி என்று சொன்னார். வட்டியை அசலுடன் சேர்த்து இரண்டு லட்சத்து எண்பதாயிரம் என்று சொன்னார். 16.11.2016 அன்று நான் எந்த ஒப்பந்தமும் எழுதிக்கொடுக்கவில்லை. வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது தான் பதிவு செய்யப்பட்ட கிரய உடன்படிக்கை ஆவணம் என்றால் சரிதான். அதற்கு முன்பு இரண்டு லட்சம் பணம் வாதியிடம் வாங்கினேன். அந்த கிரய உடன்படிக்கையில் கிரய தொகை 24 லட்சம் என்றும் முன்பணமாக ரூபாய் 10 லட்சம் வாங்கிகொண்டேன் என்றும் பாக்கி தொகையாக 14 லட்சம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் இரண்டு லட்சம் மட்டும் தான் பணம் வாங்கினேன். பத்து லட்சம் பணம் வாங்கவில்லை. முன்பணமாக

S. Malathi

கொடுக்கப்பட்ட தொகையில் 5 லட்சம் ரொக்கமாகவும் 5 லட்சம் காசோலை மூலமாகவும் கொடுக்கப்பட்டதாக ஒப்பந்தத்தில் கண்டுள்ளது என்றால் நான் வாங்கவில்லை. காசோலை வாங்கப்பட்ட அன்றே என் வங்கி கணக்கில் பணமாக மாற்றப்பட்டது என்றால் எனக்கு வங்கி கணக்கே இல்லை. என் வங்கி கணக்கு விவரங்களை எடுத்து பார்த்தால் பணம் வாங்கிய விவரம் தெரியும் என்றால் சரிதான். 11.07.2017 அன்று நான் அனுப்பிய பதிலறிவிப்பில் பத்து லட்சம் தொகையை பெற்றுக்கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் அவர் என்னிடம் நிறைய பிரச்சனை செய்தார் எனக்கு நிறைய ஆட்களுடன் வந்து தொந்தரவு கொடுத்தார் அதனால் பணம் கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொண்டேன். என் வீட்டு கதவை பூட்டிவிட்டார்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.